தரிசனம்

# கடவுளைக் காண யோகா

-சத்குரு ஜகி வாசுதேவ்

'நீங்கள் கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா? என்று என்னிடம் கேட்கிறார்கள்.

'பார்த்திருக்கிறீர்களா?' என்ற சொல் கடந்த காலத்தைக் குறிக்கிறது. நான் எப்போதும் கடவுளைப் பார்க்கிறேன். கடவுளை மட்டும்தான் பார்க்கிறேன். அதைத் தவிர வேறு எதையுமே பார்க்கவில்லை. படைப்பிற்கு மூலமாக விளங்கும் தன்மையையே நாம் கடவுள் என்று அழைக்கிறோம்.

நீங்கள் ஒரு உயிரைப் பார்க்கும்போது, அதைப் பல நிலைகளில் பார்க்க முடியும். உங்களை வெறும் உடலாகப் பார்க்கலாம். நீங்கள் பேசுவதை வைத்து உங்களை மனமாகப் பார்க்கலாம். அல்லது படைப்பிற்கும் மூலமான உங்களுடைய அடிப்படைத் தன்மையைப் பார்க்கலாம்.

உங்கள் உடலை நீங்கள் கவனித்தால், அது உள்ளிருந்துதான் உருவாக்கப்பட்டது என்பதைப் பார்க்க முடியும். காலை உணவாக இன்று பொங்கல் சாப்பிட்டீர்கள். காலையில் உட்கொண்ட பொங்கல், மாலையில் மனிதனாக ஆகிவிடுகிறது, எனவே, படைத்தல் என்பது உள்ளிருந்துதான் செயல்படுகிறது என்பதைத் தெளிவாகப் பார்க்கலாம்.

பொங்கலை மனிதனாக மாற்றுவது என்பது அத்தனை சுலபம் இல்லை. ஆனால் தினம் தினம் இது உங்களுக்குள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. எனவே, படைப்பிற்கு மூலம் எதுவோ, படைத்தவன் என்று யாரை அழைக்கிறீர்களோ, கடவுள் என்று எதைச் சொல்கிறீர்களோ, அது உள்ளிருந்துதான் செயல்படுகிறது. நான் அந்தத் தன்மையை வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் எனக்குள் பார்க்கிறேன், அனைத்திலும் அதையேதான் பார்க்கிறேன்.

எனவே, 'நீங்கள் கடவுளைப் பார்த்தீர்களா?' என்ற கேள்விக்கே இடமில்லை.

'நீங்கள் எப்போதுமே பார்த்துக் கொண்டிருப்பதை எங்களால் பார்க்க முடியவில்லையே?' என்ற கேள்வி எழலாம். இதற்கு காரணம் ஐம்புலன்கள். இவை இந்தப் படைப்பை மட்டுமே உங்களுக்குக் காட்டும். ஆனால், படைத்தவன் என்பவன் அந்தப் படைப்பிற்கே மூலமானவன் அல்லவா? படைப்பைப் பார்க்கும் உங்கள் கண்களால் படைப்பிற்கு மூலமான அந்தப் பரிமாணத்தைப் பார்க்க முடியாது. கண்களாலோ மற்ற புலன்களாலோ அறிய முடியாதென்றால், வேறு என்னதான் வழி?

'யோகா' என்னும் உள்நிலை தொழில்நுட்பம் தான் ஒரே வழி. பொருள்நிலை கடந்த பரிமாணத்தை உணர்வதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நுட்பம், இது. பொருள் நிலை கடந்த ஒன்றை பார்க்கவும், உணரவும் தொடங்கிவிட்டால் நீங்கள் ஆன்மீக வாழ்வில் இருக்கிறீர்கள் என்று சொல்லலாம். 'ஆன்மீகம்' என்றாலே பொருள்நிலை கடந்த பரிமாணம் உங்கள் வாழ்வில் யதார்த்தமான உண்மையாக உள்ளது என்று பொருள்.

எனவே, பொருள்நிலை கடந்த அந்தப் பரிமாணம்தான் பொருள் நிலைக்கு அடிப்படையாக உள்ளது. அதுதான் இந்தப் படைப்பிற்கும் மூலமாக உள்ளது. அதைத்தான் நீங்கள் 'கடவுள்' என்று அழைக்கிறீர்கள். அந்தத் தன்மை ஒவ்வொரு கணமும் உங்களுக்குள் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா... இல்லையா? என்பதில்தான் வேறுபாடே உள்ளது. அந்தத் தன்மை உங்கள் அனுபவத்திற்குள் வந்ததா... இல்லையா? என்பதுதான் கேள்வி.

## தீபாவளி துளிகள்

ஜைனமதத்தில் தீபாவளிக்கு எட்டு நாட்களுக்கு முன்பு உண்ணாவிரதம் கடைப்பிடிக்கின்றனர். அந்த எட்டு தினங்களும் அவர்கள் வெறும் வெந்நீர் மட்டுமே அருந்துவர்.

வடநாட்டில் தீபாவளி விருந்து உணவில் வெங்காயம்- பூண்டு ஆகியவற்றை சேர்த்துக் கொள்ளமாட்டார்கள்

-தேனி முருகேசன்

கர்நாடக மாநிலத்தில் தீபாவளிக்கு முதல் நாள் 'நீர் நிரப்பும் விழா' என்று ஒரு பண்டிகையை கொண்டாடுகிறார்கள்

-அ. ருக்மணி, சின்னமனூர்.